உதகமண்டலம் மாவட்ட நீதிமன்றத்தில் **2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 24–ஆம் நாள்** வாதி / பிரதிவாதி/ மனுதாரர்/எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியாகிய **பி.வா.சா.2–ன்** வாக்குமூலம் 1969–ஆம் ஆண்டு 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திரு.சி.சிங்காரம், சிரஸ்ததார், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| O.S. No | : 7 of 2020 |
| பெயர் | : M.R. சரவணன் |
| தந்தை /கணவர் பெயர் | : |
| வயது | : |
| தொழில் | : |
| கிராமம் | : |
| தாலுக்கா | : |

---

தேதி : 24.11.2025.

D.W.2

**<u>பி.வா.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை:</u>**

நான் குன்னூர் நகராட்சியில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிகிறேன். இந்த நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சம்மன் வந்ததன்பேரில்தான் நான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சம்மனில் கேட்டுள்ள ஆவணங்களில் தற்போது எங்கள் வசம் அசஸ்மெண்ட் ரிஜிஸ்டர் மட்டும்தான் இருக்கிறது, அதை நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். சம்மனில் கேட்டுள்ள மற்ற ஆவணங்கள் என்ன ஆனது என்று கேட்டால், 2009ஆம் ஆண்டு நகராட்சி கட்டிடத்தில் ரெக்கார்டு ரூமை

இடித்து கட்டியபோது நிறைய ஆவணங்கள் காணாமல் போய்விட்டன, மழை வந்தும் சேதம் ஆகிவிட்டன.

எங்கள் அசஸ்மென்ட் ரிஜிஸ்டர்படி வரிவிதிப்பு எண்கள் 15036, 15037, 15038, 15039, 15040, 15041, 15042, 15043, 15044, 15045, 15046 மற்றும் 15047 ஆகியவை சபியா காதர் மொய்தீன் பெயரில் இருக்கின்றன, மேற்கூறிய வரிவிதிப்பு எண்கள் 15036, 15037, 15038, 15039, 15040, 15041, 15042, 15043, 15044, 15045, 15046 மற்றும் 15047 ஆகியவற்றிற்குறிய கட்டிடத்தின் கதவு எண்கள் முறையே 13, 14, 14/1, 14/2, 14/3, 14/4, 14/5, 14/6, 14/7, 14/8, 14/9 மற்றும் 14/10 ஆகும். எங்கள் ரெக்கார்டு படி மேற்கூறிய கதவு எண்களுக்கான மேற்கூறிய வரிவிதிப்பு எண்கள் சபியா காதர் மொய்தீன் பெயரில் 2009ஆம் ஆண்டு மாறியுள்ளன, அந்த கதவு எண்களுக்கான குடிநீர் இணைப்பும் சபியா காதர் மொய்தீன் பெயரில்தான் உள்ளன. சபியா காதர் மொய்தீன்தான் மேற்படி கதவு எண்களுக்கான கட்டிடங்களுக்கு வரி செலுத்தி வருகிறார்.

வரிவிதிப்பு எண்கள் 15036, 15037, 15038, 15039, 15040, 15041, 15042, 15043, 15044, 15045, 15046 மற்றும் 15047 ஆகியவற்றின் அசலோடு ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப்பட்ட அசஸ்மெண்ட் ரிஜிஸ்டரின் Extract தான் Exhibit X1.

<u>**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>:

நான் குன்னூர் நகராட்சியில் 2 ஆண்டுகளாக உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். வரிவிதிப்பு எண்கள் 15036, 15037, 15038, 15039, 15040, 15041, 15042, 15043, 15044, 15045, 15046 மற்றும் 15047 சபியா காதர் மொய்தீன் பெயருக்கு மாறுவதற்கு முன்பு அந்த வரி விதிப்பு எண்கள் அலாவுதீன் பெயரில் இருந்தன. எந்த அடிப்படையில் மேற்கூறிய வரி விதிப்பு எண்களை அலாவுதீன் பெயரில் இருந்து சபியா காதர் மொய்தீன் பெயருக்கு மாற்றினோம் என்று கேட்டால், பத்திர பதிவு அடிப்படையில் மாற்றினோம். அந்த பத்திரத்தின் நகலை எங்களிடம் கொடுத்திருந்தார்களா என்று கேட்டால், கொடுத்திருந்தார்கள், ஆனால் ரிக்கார்டு ரூமை இடித்து கட்டியதால் அந்த பத்திரத்தின் நகல் மழையில் நனைந்து சேதமாகிவிட்டது, அதனால் அந்த பத்திரத்தின் நகலை நீதிமன்றத்திற்கு கொண்டுவரவில்லை. அந்த பத்திரம் கிரைய பத்திரமா அல்லது செட்டில்மெண்ட் பத்திரமா என்பது எனக்கு தெரியாது என்று சொன்னால், 2009ஆம் ஆண்டு பண்ணியதால் எனக்கு தெரியவில்லை. வரி விதிப்பு எண்களை ஒருவர் பெயரில் இருந்து மற்றவர் பெயருக்கு மாற்றுவதற்கு நகராட்சி ஆணையர் ஒரு உத்தரவு போடுவார், அந்த உத்தரவு போட்ட பிறகுதான் வரி விதிப்பு எண்களை பெயர் மாற்றம் செய்வோம் என்று சொன்னால், ஆமாம். நகராட்சி ஆணையர் மேற்கூறிய வரி விதிப்பு எண்களை

பெயர் மாற்றம் செய்ய போட்ட உத்தரவை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், இன்றைக்கு தாக்கல் செய்யவில்லை. நகராட்சி ஆணையர் மேற்கூறிய வரி விதிப்பு எண்களை பெயர் மாற்றம் செய்ய போட்ட உத்தரவு எங்கள் அலுவலகத்தில் இருக்கிறது என்று சொன்னால், இல்லை, மழையில் சேதமாகிவிட்டது. Exhibit X1ல் வரி விதிப்பு யார் பெயருக்கு இருக்கிறது எவ்வளவு வரி என்ற விவரம் மட்டும்தான் இருக்கிறது என்று சொன்னால், ஆமாம், மேலும் அதில் கதவு எண்ணும், தெரு பெயரும் இருக்கின்றன.

கிரைய பத்திரம் அல்லது செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் நகராட்சி ஆணையர் பிறப்பித்த உத்தரவின் பேரில் வரி விதிப்பு மாற்றப்பட்டாலும், அந்த கிரைய பத்திரம் அல்லது செட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறைக்கு வந்ததா இல்லையா என்பதை பற்றி எங்களுக்கு தெரியாது என்று சொன்னால், சரியில்லை, தெரியும். நான் பத்திரம் நடைமுறைக்கு வந்துவிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், ஏனென்றால் சபியா காதர் மொய்தீனே அந்த பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளார் என்று சொன்னால், சரியில்லை.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.11.24 17:20:01 +0530